(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 2(2).]**

# பாராளுமன்றம்

## 2 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2020 நவம்பர் 18 புதன்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2020 நவெம்பர் 30, திங்கட்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

9/2020

கௌரவ ஹேஷா விதானகே,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபைக்கு உரித்தான —

(i) கைத்தொழில் பேட்டைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) நில அலகுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) கைத்தொழில் பேட்டைகளில் இயங்கும் கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) கைத்தொழில் பேட்டைகளில் தொழில் புரியும் ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2017 ஆம் ஆண்டில் இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் மத்திய மாகாணத்துக்காக —

(i) சுயதொழில் மேம்பாட்டுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்ட இடங்கள் யாவையென்பதையும்;

(iii) வழங்கப்பட்டுள்ள கருவிகள் யாவையென்பதையும்;

(iv) பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ள அடிப்படை யாதென்பதையும்;

(v) மேற்கொள்ளப்பட்டுள்ள தொழில்நுட்ப பயிற்சி வேலைத்திட்டங்கள் யாவையென்பதையும்;

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) தற்போது இணையத்தின் ஊடாக இலத்திரனியல் வர்த்தகத்தை மேற்கொள்வதற்கான வாய்ப்பு கிராமிய பிரதேசங்களில் வாழ்வோருக்குக்கும் திறந்துவிடப்பட்டுள்ள போதிலும், அதற்கான போதிய அறிவு வழங்கப்படவில்லை என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) இவ்வறிவினை முறையாக வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

100/2020

கௌரவ புத்திக பத்திறண,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மக்களின் சட்டப் பிரச்சனைகளுக்குத் துரிதமாக தீர்வு காண்பதற்கும், சட்ட ஆலோசனைகளைப் பெறுவதற்கும் ஒரு நீதவான் நீதிமன்ற நியாயாதிக்கப் பிரதேசத்துக்கு குறைந்த பட்சம் தலா ஒரு சட்டத்தரணியை பொலிஸ் வழக்குகளை கையாளும் உத்தியோகத்தராக (Prosecutor) குறிப்பிட்ட நியாயாதிக்கப் பிரதேசத்திற்காக நியமிப்பதன் மூலம் இலங்கைப் பொலிஸிடமிருந்து சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் மக்கள் அதிக பயனடைவார்கள் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி புதிய பதவியினை உருவாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சாத்தியம் காணப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

119/2020

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பிங்கிரிய ஏற்றுமதி தயாரிப்பு வலயத்தின் நுழைவுப் பாதை நிர்மாணிக்கப்படும் போது சேதமடைகின்ற சொத்துக்களுக்கும் அதற்காக சுவீகரிக்கப்படும் காணிகளுக்கும் இழப்பீடுகள் செலுத்தப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி இழப்பீடு பெறுநர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) அதற்காக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள இழப்பீடுகளின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி இழப்பீடுகளைச் செலுத்துவதற்காக இலங்கை முதலீட்டுச் சபையினால் உடுபத்தாவ பிரதேச செயலாளருக்கு இன்றளவில் நிதி விடுவிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அத் தொகை எவ்வளவென்பதையும்;

(vi) அத் தொகை விடுவிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

214/2020

கௌரவ மொஹொமட் முசம்மில்,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2015 முதல் 2019 வரையிலான ஒவ்வொரு ஆண்டிலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட உப்பின் அளவு எவ்வளவு என்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) எந்த நாடுகளிலிருந்து உப்பு இறக்குமதி செய்யப்பட்டதென்பதையும்;

(iv) மேற்படி உப்பு இறக்குமதி செய்த கம்பனிகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் இலங்கைக்கு உப்பு இறக்குமதி செய்வதற்காக செலவிடப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவு என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

252/2020

கௌரவ வேலு குமார்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள ஹந்தானை தோட்டமானது மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான தோட்டமொன்றாகும் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 1992 ஆம் ஆண்டில் அரசாங்கத்திற்குச் சொந்தமான தோட்டங்கள் மறுசீரமைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் இத்தோட்டத்திற்குச் சொந்தமாகவிருந்த பிரிவுகளின் (Divisions) எண்ணிக்கை யாவை;

(ii) அப்பிரிவுகளின் பெயர்கள் யாவை;

(iii) 2015 ஆம் ஆண்டில் கைவிடப்பட்ட அல்லது மூடப்பட்ட பிரிவுகள் உள்ளனவா;

(iv) ஆமெனில், அப்பிரிவுகளின் நிலப்பரப்பு யாது;

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 1992 முதல் 2015 வரையிலான காலப்பகுதியினுள் இந்த தோட்டத்திற்குச் சொந்தமான காணி, தொழிற்சாலை மற்றும் ஏனைய கட்டிடங்கள் வெளித் தரப்பினர்களுக்கு/தனியாருக்கு வழங்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், குறித்த விபரங்கள் யாவை;

(iii) இறுதியாக மேற்கொள்ளப்பட்ட காணிக் கணக்கெடுப்பிற்கு அமைவாக இத்தோட்டத்திலே பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலங்களின் அளவு மற்றும் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாத நிலங்களின் அளவு யாவை;

என்பதை வெவ்வேறாக அவர் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

453/2020

கௌரவ இஷாக் ரஹுமான்,— வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அனுராதபுர மாவட்டத்தின் கஹட்டகஸ்திகிலிய பிரதேச செயலகப் பிரவின் 215 ஆம் இலக்க திவுல்வெவ கிராம உத்தியோகத்தர் பிரிவின் பம்பரஎல கிராமத்தில் 1973 ஆம் ஆண்டு தொடக்கம் சேனைப் பியிர்ச்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளின் அறுதி உறுதிகளுடன் கூடிய காணிகளுக்கு வனசீவராசிகள் உத்தியோகத்தர்கள் பிரவேசித்து ஒதுக்க எல்லைகளை அடையாளமிட்டு எல்லைக் கற்கள் இட்டுள்ளனர் என்பதை அறிவாரா?

(ஆ) ஆமெனில், இவ்விடயம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

608/2020

கௌரவ கயந்த கருணாதிலக,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்க முதியோர் இல்லங்கள் தொடர்பில் ஒழுங்குறுத்தல் மேற்கொள்கிறதா என்பதையும்;

(ii) மேற்படி இல்லங்கள் தொடர்பில் தரநியமங்கள் காணப்படுகின்றனவா என்பதையும்;

(iii) அவ்வாறு தரநியமங்களுடன் இயைபுறாத முதியோர் இல்லங்களை நவீனமயப்படுத்த முதியோர் இல்லங்களை நவீனமயப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இலங்கையில் இயங்கி வரும் முதியோர் இல்லங்களில் அரசாங்கம், தனியார் துறை மற்றும் அரசாங்கமும் தனியார் துறையும் இணைந்து நடத்திச் செல்லும் முதியோர் இல்லங்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

780/2020

கௌரவ கே. காதர் மஸ்தான்,— பிரதம அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) முன்னாள் புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சின் கீழ், வவுனியா பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட வீடமைப்புத் திட்டத்தின் கீழ் வீடற்றவர்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) வவுனியா பிரதேச செயலகப் பிரிவிற்கான 42 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு மத்தியில் வீடுகளை வழங்குவதற்காக 2019ஆம் ஆண்டில் அடையாளம் காணப்பட்டுள்ள பயனாளிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கும் இதுவரை வழங்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iii) மேற்படி வீடு பெறுநர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கும் வீடுகள் ஒதுக்கப்படும் அடிப்படை யாது என்பதையும்;

(ii) கள்ளிக்குளம் கிராம உத்தியோகத்தர் பிரிவிற்கான ஆரம்பக் குடியிருப்பாளர்களுக்கும் பின்னர் குடியமர்த்தப்பட்டவர்களுக்கும் வீடுகளை ஒதுக்கீடு செய்கையில் அடிப்படையாகக் கொள்ளப்பட்ட காரணிகள் யாவை;

(iii) மேற்படி வீடுகளை ஒதுக்கீடு செய்கையில் எழுந்துள்ள பிரச்சினையைத் தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது என்பதையும்;

(iv) இதுவரையில் வீடுகள் கிடைக்கப்பெறாதுள்ளவர்களுக்கு வீடுகள் வழங்கப்படும் திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2020 டிசம்பர் 01, செவ்வாய்க்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

49/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பதுளை மாவட்டத்திலுள்ள அரசாங்க பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பாடசாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) இப்பாடசாலைகளில் தற்சமயம் உயர்தர தொழில்நுட்பப் பாடப் பிரிவை கற்றக் கூடிய வசதிகள் கொண்ட பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி பாடசாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(v) பதுளை மாவட்டத்தில் உயர்தர தொழில்நுட்ப பாடங்களை கற்கக்கூடிய வசதிகளை மேலும் விரிவாக்குவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் வழிமுறைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

149/2020

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொலொன்னாவ கல்விக் கோட்டத்தில் அமைந்துள்ள ஒரேயொரு கலவன் தேசிய பாடசாலையாகிய குடாபுத்கமுவ ஸ்ரீ இராஜசிங்க வித்தியாலயத்தில் கல்விசார் பணியாட்டொகுதியில் வரலாறு, குடியியற் கல்வி, நாடகமும் அரங்கியலும், ஆகிய பாடங்களுக்கு 02 ஆசிரியர்கள் வீதமும், தமிழ் மொழி, சித்திரக் கலை, தகவல் தொழில்நுட்பம், ஊடகக் கல்வி, பௌதிகவியல், விவசாயம், உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல், கணக்கீடு, தொடர்பாடல் மற்றும் ஊடகவியற் கற்கை, பௌத்த நாகரிகம் ஆகிய பாடங்களுக்கு 01 ஆசிரியர் வீதமும் மாணவர்களுக்கான உளவள ஆலோசனை, ஆசியர்களுக்கான நூலகர் ஆகிய ஏதுவான பதவிகளில் 01 வெற்றிடம் வீதமும் வெற்றிடங்கள் நிலவுகின்றதென்பதையும்;

(ii) கல்விசாரா பணியாட்டொகுதியிலும், துப்பரவேற்பாட்டு தொழிலாளர், பூங்கா பணிகளுக்கான தொழிலாளர் மற்றும் சாதாரண தொழிலாளர் ஆகிய பதவிகளில் 02 வெற்றிடங்கள் வீதமும் விஞ்ஞானக் கூட உதவியாளர் பதவியில் 03 பதவி வெற்றிடங்களும் முகாமைத்துவ உதவியாளர் பதவியில் 01 வெற்றிடமும் நிலவுகின்றதென்பதையும்;

அவர்அறிவாரா?

(ஆ) மேற்படி பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு கொண்டுள்ள திட்டங்களையும் இவ் வெற்றிடங்களை நிரப்புகின்ற திட்டவட்டமான திகதிகள் யாவையென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

190/2020

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இலங்கையிலுள்ள கிரிக்கட் விளையாட்டு சங்கங்களின் எண்ணிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் 25 நிர்வாக மாவட்டங்களுக்கும் 25 கிரிக்கட் சங்கங்கள் உள்ளன என்பதையும்;

(ii) கிளிநொச்சி மாவட்டத்திற்கு கிரிக்கட் சங்கமொன்றை நிறுவுவதற்கு இற்றை வரையில் அனுமதி பெற்றுக்கொடுக்கப்படவில்லையென்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) (i) கிளிநொச்சி மாவட்டத்திற்கு கிரிக்கட் சங்கமொன்றை நிறுவுவதற்கு இற்றை வரையில் அனுமதி பெற்றுக்கொடுக்காமைக்கு;

(ii) பதிவைக் கோரி கிளிநொச்சி மாவட்ட கிரிக்கட் சங்கம் பல சந்தர்ப்பங்களில் விண்ணப்பித்திருந்தும் இற்றை வரையில் பதிவு செய்யாமைக்கு;

காரணங்கள் யாவை என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) 2010 ஆம் ஆண்டின் பின்னர் கிளிநொச்சி மாவட்ட கிரிக்கட் சங்கத்திற்காக விளையாட்டு அமைச்சினால் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள உதவிகள் யாவை என்பதையும் அவர் மேலும் இச்சபையில் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

204/2020

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இதய சத்திர சிகிச்சைகள் செய்வதற்காக அரசாங்க வைத்தியசாலைகளில் ஆயிரக்கணக்கான நோயாளிகள் வருடக்கணக்காக காத்திருப்போர் பட்டியலில் இருக்கின்றார்கள் என்பதையும்;

(ii) இச் சத்திர சிகிச்சைகளுக்கு இலங்கையிலும் வெளிநாட்டிலும் தனியார் வைத்தியசாலைகளில் மில்லியன் கணக்கான ரூபாய் செலவழிக்கப்படுகிறது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆம் எனில் —

(i) கடந்த ஐந்து வருடங்களில் இலங்கையில் அறிக்கையிடப்பட்ட இதயம் தொடர்பான நோய்கள் எத்தனை என்பதையும்;

(ii) கடந்த ஐந்து வருடங்களில் அரசாங்க வைத்தியசாலைகளில் இதய சத்திர சிகிச்சைகளுக்காக பதிவு செய்யப்பட்ட நோயாளிகள் எத்தனை பேர் என்பதையும்;

(iii) கடந்த ஐந்து வருடங்களில் பதிவு செய்யப்பட்ட நோயாளிகளில் வருடாந்தம் எத்தனை சத்திர சிகிச்சைகள் நடாத்தப்படுகின்றன என்பதையும்;

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) (i) தற்போதைய நடைமுறையில் அரசாங்கம் திருப்தி அடைகிறதா என்பதையும்;

(ii) தற்போது நிலவும் இந்நிலைமையை மேலதிக முன்னேற்றத்திற்கான முக்கிய அவதானிப்புகள், சிபாரிசுகள் என்னவென்பதையும்;

அவர் மேலும் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

303/2020

கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக்கழக மற்றும் தொலைக் கல்வி மேம்பாட்டிற்கான ஒரு இராஜாங்க அமைச்சு உருவாக்கப்பட்டுள்ள பின்னணியில் —

(i) இலங்கையில் பல்வகை திறந்த பல்கலைக்கழகங்களை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் நோக்கம் கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) உயர் கல்வியினை பெறுவதற்கு எதிர்பார்க்கும் எவ் வகுதியினரை இலக்குவைத்து தொலைக்கல்வி வசதிகளை விரிவாக்குவதற்கு அரசு நோக்கம் கொண்டுள்ளதென்பதையும்;

(iii) தொலைக் கல்வி வாய்ப்புகளுக்கு சலுகைகளை வழங்குவதற்கு எதிர்காலத்திலும் அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் அதன் நிதியத்தின் கீழ் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம் தொடர்ந்தும் செயற்படுகின்றதா என்பதையும்;

(ii) இல்லையெனில், அது எந்த அதிகார முறைமைக்கு உட்படுத்தப்படும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் பணிகளுக்ககாக ஒதுக்கப்பட்டுள்ள நிதி எவ்வளவென்பதையும்;

(ii) பல்கலைக்கழகத்திற்காக உறப்படும் செலவினத்தில் அரசின் பங்களிப்பு எவ்வளவு என்பதையும்;

மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

428/2020

கௌரவ சாந்த பண்டார,— மின்சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் நாளாந்த மின்சார நுகர்வு அண்ணளவாக யாது;

(ii) மேற்படி தேவைக்கான மின்சாரப் பிறப்பாக்கம் மேற்கொள்ளப்படும் மூலங்கள் யாவை;

(iii) தேசிய மின்சக்தி முறைமைக்காக மேற்படி ஒவ்வொரு மூலத்திலிருந்தும் பிறப்பாக்கம் செய்யப்படும் மின்சாரம் சதவீதமாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2021 ஆம் ஆண்டாகும் போது அரசாங்கத்தின் இடையீட்டுடன் பிறப்பாக்கம் செய்யப்படும் மின்சாரம் 2025 ஆம் ஆண்டு வரை போதுமானதா;

(ii) இல்லையெனில், அதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

482/2020

கௌரவ துஷாரா இந்துனில் அமரசேன,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் கடும் நிதி நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது என்பதையும்;

(ii) அதன் காரணமாக ஊழியர் சம்பளங்களைச் செலுத்துவது கூட கடினமாகியுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தற்போது கடமையாற்றுகின்ற ஒட்டுமொத்த பணியாட்டொகுதியினரின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஊழியர்களுக்கு அரைச் சம்பளத்துடன் மூன்று மாத கால லீவு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தை நிதி சார் அடிப்படையில் வலுவூட்டுவதற்கு அமைச்சு மேற்கொள்ளவுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் அவர் இச்சபைக்கு அறிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

548/2020

கௌரவ சந்திம வீரக்கொடி,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) காலி, பெலிகஹ சந்தியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் புதிய நீதிமன்றக் கட்டிடத்தொகுதியின் நிர்மாணப் பணிகள் மந்தகதியில் இடம்பெறுவதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி நீதிமன்றக் கட்டிடத்தொகுதியின் நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) இதற்குப் போதிய நிதி ஏற்பாடுகள் தற்போது உள்ளனவா என்பதையும்;

(iii) அவ்வாறில்லையெனில், அதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுக்கொள்ளும் மூலங்கள் யாவை என்பதையும்;

(iv) அவ்வாறு நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுக்கொண்ட பின்னர் அதன் நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2020 டிசம்பர் 02, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

17/2020

கௌரவ ஹேஷா விதானகே,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இலங்கையில் மாவட்ட நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளில் இதுவரையில் விசாரணை மேற்கொள்ளப்பட்டாத மற்றும் விசாரணை மேற்கொள்ளப்படும் வழக்குகள் உள்ளன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், குறிப்பிட்ட வழக்கு இலக்கங்கள் மற்றும் அவை தாக்கல் செய்யப்பட்டுள்ள திகதிகள் வெவ்வேறாக யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி வழக்குகளில் —

(i) 01- 05 வருடங்களுக்கு இடைப்பட்ட;

(ii) 05- 10 வருடங்களுக்கு இடைப்பட்ட;

(iii) 10- 15 வருடங்களுக்கு இடைப்பட்ட;

(iv) 15-20 வருடங்களுக்கு இடைப்பட்ட;

(v) 20-25 வருடங்களுக்கு இடைப்பட்ட;

(vi) 25 வருடங்களுக்கு அதிகமான;

காலமாக விசாரிக்கப்படும் பழைய வழக்குகள் யாவை என்பதை உரிய வழக்கு இலக்கங்கள் மற்றும் தாக்கல் செய்யப்பட்ட/ ஆவணப்படுத்தப்பட்ட திகதியுடன் வெவ்வெறாக யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

105/2020

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இலங்கை பொலிஸ், விசேட அதிரடிப்படை மற்றும் மதுவரித் திணைக்களம் ஆகிய ஒவ்வொரு நிறுவனத்தினாலும் 2017.01.01 முதல் 2019.01.01 வரையில் —

(i) மேற்கொள்ளப்பட்ட செயற்கை கள்ளு சுற்றுவளைப்புகளின் எண்ணிக்கை;

(ii) மேற்குறிப்பிட்ட காலத்தில் கைப்பற்றப்பட்ட செயற்கை கள்ளு லீற்றர்களின் அளவு;

(iii) மேற்படி சுற்றிவளைப்புக்களில் அறவிடப்பட்ட அபராதத்தின் பெறுமதி;

தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சில கள்ளு உற்பத்தியாளர்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ள அளவினையும்விட களஞ்சிய வசதிகளை பேணி வருகிறார்கள் என்பதையும்;

(ii) அவர்கள் செயற்கை கள்ளு உற்பத்தி செய்து களஞ்சியப்படுத்துகின்றார்கள் என்பதையும்;

(iii) விசேட அதிரடிப்படை சுற்றிவளைப்புகளை மேற்கொண்டு இச்செயற்கைக் கள்ளினை கைப்பற்றியபோதிலும், சில மதுவரி உத்தியோகத்தர்கள் அவற்றை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தாது, தொழில்நுட்ப கோளாறுகளாக சுட்டிக்காட்டி, தீர்வுக் கட்டணத்துக்கு உட்படுத்தி குற்றவாளிகளை விடுதலை செய்வதாகவும்;

(iv) செயற்கை கள்ளினை உற்பத்தி செய்வதானது தொழில்நுட்பக் கோளாறல்ல, மாறாக அது சில மதுவரி உத்தியோகத்தர்கள் வேண்டுமென்றே இந்த உற்பத்தியாளர்களைப் பாதுகாப்பதற்காக எடுக்கும் நடவடிக்கையே என்பதையும்;

(v) அதனால் அரசாங்கம் அதிகளவிலான வரி வருமானத்தை இழக்கின்றது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) செயற்கை கள்ளு உற்பத்தியை நிறுத்துவதற்கான சட்ட மறுசீரமைப்புக்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(ii) ஆமெனில், குறிப்பிட்ட நடவடிக்கைகள் யாவை;

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

217/2020

கௌரவ மொஹொமட் முசம்மில்,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை ஒவ்வோர் ஆண்டிலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பாசிப்பயறின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட நிதி எவ்வளவென்பதையும்;

(iii) எந்த நாடுகளிலிருந்து பாசிப்பயறு இறக்குமதி செய்யப்பட்டதென்பதையும்;

(iv) மேற்படி பாசிப்பயறை இறக்குமதி செய்த நிறுவனங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

தனித்தனியே அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் இலங்கைக்கு பாசிப்பயறை இறக்குமதி செய்வதற்காக செலவிடப்பட்ட மொத்த பணத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

254/2020

கௌரவ வேலு குமார்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கிரேட்வெலி தோட்டம், கண்டி மாவட்டத்தின் தெல்தோட்டை பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபைக்குரிய தோட்டம் என்பதனை அவர் அறிவாரா?

(ஆ) (i) 1992 ஆம் ஆண்டில் அரசாங்கத்திற்குச் சொந்தமான தோட்டங்கள் மறுசீரமைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் இத்தோட்டத்திற்குச் சொந்தமாகவிருந்த பிரிவுகளின் (Divisions) எண்ணிக்கை யாவை;

(ii) அப்பிரிவுகளின் பெயர்கள் யாவை;

(iii) 2015 ஆம் ஆண்டில் கைவிடப்பட்ட அல்லது மூடப்பட்ட பிரிவுகள் உள்ளனவா;

(iv) ஆமெனில், அப்பிரிவுகளின் நிலப்பரப்பு யாது;

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 1992 ஆம் ஆண்டு முதல் 2015 ஆண்டு வரையிலான காலப்பகுதியினுள் இந்த தோட்டத்திற்குச் சொந்தமான காணி, தொழிற்சாலை மற்றும் ஏனைய கட்டிடங்கள் வெளித்தரப்பினர்களுக்கு/தனியாருக்கு வழங்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், குறித்த விபரங்கள் யாவை;

(iii) இறுதியாக மேற்கொள்ளப்பட்ட காணிக் கணக்கெடுப்பிற்கு அமைவாக இத்தோட்டத்திலே பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலங்களின் அளவு மற்றும் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாத நிலங்களின் அளவு யாவை;

என்பதை வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

450/2020

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் (International Committee of the Red Cross – ICRC) ஊடாக பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானிலிருந்து எமது நாட்டுக்கு வந்த அகதிகளின் எண்ணிக்கை;

(ii) மேற்படி அகதிகள் தற்போது தங்க வைக்கப்பட்டுள்ள இடங்கள்;

(iii) அந்த அகதிகளுக்கு வழங்கப்படுகின்ற வசதிகள்;

யாவையென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இலங்கை இவ்வாறு பிற நாடுகளின் அகதிகளை பொறுப்பேற்பதனால் இந் நாட்டின் சமூக மற்றும் பொருளாதாரத்தின் மீது பாரிய சுமை ஏற்படுகின்றது என்பதை அவர் அறிவாரா?

(இ) இந்தப் பிரச்சினை தொடர்பில் அமைச்சு எடுக்கும் நடவடிக்கை யாதென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

517/2020

கௌரவ சாணக்கியா ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடற்றொழிலில் சுருக்கு வலையை பயன்படுத்துவதற்கு சில கட்டுப்பாடுகளின் கீழ் அனுமதி வழங்கப்பட்டுள்ள போதிலும், மீனவர்கள் இதனை உரிய வகையில் பயன்படுத்தாமையினால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கடற்கரை அண்மித்த பிரதேசங்களில் மீன்பிடிக்கும் உள்ளூர் மீனவர்களின் வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதெனவும்;

(ii) இதனை கட்டுப்படுத்துவது மிகச் சிரமமாக இருப்பதால் புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தீர்வுகளை நடைமுறைப்படுத்துவது கட்டாயமென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு மேற்கொள்ளப்படவுள்ள நடைமுறைகள் யாவை என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

525/2020

கௌரவ ரோஹன பண்டார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள விளையாட்டு பாடசாலைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) தற்போது மேற்படி பாடசாலைகளிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி விளையாட்டு பாடசாலைகளை மேற்கொண்டும் முன்னேற்றுவதற்காக அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

610/2020

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) குளியாப்பிட்டி ஆதார வைத்தியசாலை, போதனா வைத்தியசாலையாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வைத்தியசாலையை இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின், மருத்துவ பீடத்தின் பிணியாய்வு பயிற்சிகளுக்குப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) இது தொடர்பான விடயங்களை ஆய்வு செய்வதற்காக மூன்றுபேர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதை அவர் அறிவாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடம் மற்றும் குளியாப்பிட்டி போதனா வைத்தியசாலை தொடர்பில் பேராசிரியர் அலகு அமைக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி அலகினை குளியாப்பிட்டி வைத்தியசாலையில் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2020 டிசம்பர் 03, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

53/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை அரசுக்கு உரித்தான கூட்டுத்தாபனங்கள், சபைகள், அதிகாரசபைகள் போன்ற நியதிச்சட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை யாவையென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்களில் தற்போதுள்ள தவிசாளர்கள் மற்றும் பணிப்பாளர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி தவிசாளர்கள் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களை நியமனம் செய்யும் போது பின்பற்றிய நடவடிக்கைமுறை யாதென்பதையும்;

(v) அந்நிறுவனங்களை நிதிரீதியாகப் பலப்படுத்துவதற்கு அமைச்சு எடுக்கவுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

160/2020

கௌரவ. எஸ்.எம். மரிக்கார்,— பிரதம அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மீதொட்டமுல்ல குப்பை மேடு அமைந்துள்ள நிலப்பிரதேசத்தை ஒரு நகரப் பூங்காவாக மாற்றியமைப்பதற்கான பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒதுக்கீட்டினை பயன்படுத்தி இற்றைவரை நிறைவு செய்யப்பட்டுள்ள பணியின் அளவு எவ்வளவென்பதையும்;

(iii) நிறைவுசெய்வதற்கு எஞ்சியுள்ள பணியின் அளவு எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இக்கருத்திட்டத்தின் பணிகளை நிறைவு செய்வதற்கு உத்தேசிக்கப்படும் திகதி யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

191/ 2020

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கிளிநொச்சி, நகர மத்தியில் அமைந்துள்ள பொது விளையாட்டு மைதானத்தை சர்வதேச தரத்திலான விளையாட்டு மைதானமாக அபிவிருத்தி செய்வதற்கு 2010 ஆம் ஆண்டில் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இற்றைக்குப் பத்து ஆண்டுகள் கடந்துள்ளபோதும், அந்த மைதானத்தை கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள விளையாட்டு வீரர்களின் பயன்பாட்டுக்காக இதுவரை ஒப்படைக்கப்படவில்லை என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி விளையாட்டு மைதானம் சர்வதேச மட்டத்திலான விளையாட்டு மைதானமா; இன்றேல் மாவட்ட மட்டத்திலான விளையாட்டு மைதானமா என்பதையும்;

(ii) விளையாட்டு மைதானத்தின் நிர்மாணப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி தொகையில் கடந்த பத்து வருட காலப்பகுதியில் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) விளையாட்டு மைதானத்தை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டுள்ள ஒப்பந்தக்கார்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(v) நிர்மாணப் பணிகளை மேற்கொள்கின்ற தற்போதைய ஒப்பந்தக்காரரின் பெயர் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிப்பாரா?

(இ) (i) மேற்படி விளையாட்டு மைதானத்தின் புனர்நிர்மாணப் பணிகளில் ஏற்பட்டுள்ள தாமதம், மாவட்டத்திலுள்ள விளையாட்டு வீரர்களின் செயற்பாடுகளுக்கு எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்பதையும்;

(ii) மாவட்டத்தில் விளையாட்டுத் துறையை முன்னேற்றுவதற்காக அமைச்சினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

419/2020

கௌரவ வருண லியனகே,— பெருந்தோட்ட அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தில் தோட்டங்களில் வசிக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை யாது?

(ii) இவர்களுக்கு வீடுகளை அமைப்பதற்கான காணிகள் வழங்கப்பட்டுள்ளனவா;

(iii) ஆமெனில், காணிகள் வழங்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாது;

(iv) அந்தக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ள காணியின் அளவு யாது;

(v) அவ்வாறாயின் காணிகள் வழங்கப்பட்டுள்ள குடும்பங்கள் சார்ந்துள்ள தோட்டக் கம்பனிகளின் பெயர்கள் யாவை;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) காணிகளற்ற தோட்டக் குடும்பங்களுக்கு காணிகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை எத்தகைய நடவடிக்கைகள் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

421/2020

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் அநேகமான வேலைகள் பூரத்தி செய்யப்பட்டு வருகின்ற "விசல் மாத்தளை" நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் குடிமனைகளுக்கான நீர் இணைப்புகள் வழங்கப்படவுள்ள உக்குவெல, இரத்தோட்டை, மாத்தளை, யட்டவத்த, மற்றும் பல்லேபொல பிரதேச செயலகப் பிரிவுகளில் அமைந்துள்ள கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை என்னவென்பதையும்;

(ii) அந்தக் கிராம அலுவலர் பிரிவுகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் குடிமனைகளுக்கான நீர் இணைப்புகள் வழங்கப்படுவதில் உள்ளடக்கப்படாத பல கிராம அலுவலர் பிரிவுகள் மேற்படி பிரதேச செயலாளர் பிரிவில் காணப்படுவதை அவர் அறிவாரா;

(ii) அந்தக் கிராம அலுவலர் பிரிவுகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி கிராம அலுவலர் பிரிவுகளில் குடிமனைகளுக்கான நீர் இணைப்புகள் வழங்கப்படாத கிராமங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) அக்கிராமங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் அக்கிராமங்களுக்கும் குடிமனைகளுக்கான நீர் இணைப்புகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(vi) இன்றேல், அதற்கென மாற்றுத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுமா என்பதையும்;

(vii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

429/2020

கௌரவ சாந்த பண்டார,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கைப் பொலிசாரால் அளப்பரிய சேவை நிறைவேற்றப்படுகின்றது என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ள பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பொலிஸ் நிலையங்களை நவீனமயப்படுத்துவதற்காக தேசிய வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) அளவ்வ பொலிஸ் நிலையத்தினை நவீனமயப்படுத்த வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வாரா;

(ii) ஆமெனின், அதற்காக நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

483/2020

கௌரவ துஷாரா இந்துனில் அமரசேன,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய கமத்தொழில் தகவல், தொடர்பாடல் நிலையத்தினால் இலங்கையின் பயிர்நிலையங்களில் கிருமிநாசினி, களைநாசினி மற்றும் உரப் பயன்பாடு தொடர்பாடல் ஆராய்ச்சியொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) கிருமிநாசினி, களைநாசினி மற்றும் உரம் பயன்படுத்தி பயிர்செய்யும் நாடுகளில் இலங்கை முன்னிலை அடைந்துள்ள நாடொன்று என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) கிருமிநாசினி, களைநாசினி மற்றும் உரம் பயன்படுத்தி பயிர் செய்கை மேற்கொள்வதைக் குறைப்பதற்கு அமைச்சு எடுக்கும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

781/2020

கௌரவ கே. காதர் மஸ்தான்,— பிரதம அமைச்சரும் நிதி அமைச்சரும், புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 ஆண்டு தொடக்கம் 2015 ஆண்டு வரை அப்போதைய தேசிய கொள்கைகள், பொருளாதார நடவடிக்கைகள், மீள் குடியேற்றம், புனர்வாழ்வு, வட மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சிற்கு புனர்வாழ்வு மற்றும் மீள் குடியேற்ற நடவடிக்கைகளுக்காக பல்வேறு நாடுகள் மற்றும் நிறுவனங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களின் வகைகள், அவற்றின் பதிவு இலக்கங்கள் மற்றும் அவை பயன்பாட்டுக்காக வழங்கப்பட்ட அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(ii) அவ்வாகனங்களின் தற்போதைய நிலை யாதென்பதையும்;

(iii) அவ்வாகனங்களை தற்போது பயன்படுத்தும் நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(iv) தற்போது தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள WP RB- 2639 எனும் பதிவிலக்கத்தைக் கொண்ட உழவு இயந்திரத்தைப் பயன்படுத்திய அமைச்சு மற்றும் அதன் உரிய பிரிவு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) (i) 2009 ஆண்டு தொடக்கம் 2012 ஆண்டு வரை மெனிக்பாம் இடைத்தங்கல் முகாமில் பயன்படுத்தப்பட்ட வாகனங்களின் வகைகள் மற்றும் பதிவு இலக்கங்கள்;

(ii) தற்போது அவ்வாகனங்களைப் பயன்படுத்தும் நிறுவனங்கள் மற்றும் இடங்கள்;

வெவ்வேறாக யாவையென்பதையும் அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2020 டிசம்பர் 04, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

21/2020

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சரும் நிதி அமைச்சரும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குற்றத் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கையில், 2015 ஆம் ஆண்டு முதல் கொலை செய்யப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை வருட ரீதியாக எவ்வளவு;

(ii) மேற்படி பொலிஸ் உத்தியோகத்தர்கள் கொலை செய்யப்பட்டமைக்கான காரணங்கள் யாவை;

(iii) மேற்படி பொலிஸ் உத்தியோகத்தர்களின் மனைவி பிள்ளைகளை பாதுகாப்பதற்கு பொலிஸ் திணைக்களம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(iv) உத்தியோகத்தர்களின் உயிர் பாதுகாப்பு மற்றும் அவரது மனைவி, பிள்ளைகளது பாதுகாப்பு தொடர்பில் நடைமுறையிலுள்ள செயன்முறைகளை, மேம்படுத்துவதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா;

(v) ஆமெனில், அது மேற்கொள்ளப்படும் கால கட்டம் மற்றும் செயன்முறை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குற்றத் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கையில் 2015 ஆம் ஆண்டு முதல் கொலை செய்யப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களின் மனைவி பிள்ளைகளுக்கு செலுத்தப்பட்டுள்ள கொடுப்பனவுகளின் பெறுமதி யாது;

(ii) அவர்களது விதவைகள் மற்றும் அநாதைகள் கொடுப்பனவு உரிய முறையில் செலுத்தப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) கொலை செய்யப்பட்டதன் பின்னர் —

(i) பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது;

(ii) பதவி உயர்வு வழங்கப்படாதுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது;

(iii) பதவி உயர்வு வழங்கப்படாதுள்ள உத்தியோகத்தர்களுக்கு பதவியுயர்வு வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை;

என்பதை மேலும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

106/2020

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் கள்ளு உற்பத்திக் கைத்தொழில் வியாபித்துள்ள மாவட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி கைத்தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள நபர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2019.12.31 ஆம் திகதியளவில் இலங்கையில் உரிமம் பெற்ற கள்ளு உற்பத்தியாளர்கள்/நிறுவனங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொர் உற்பத்தி ஆலைக்கும் ஏற்புடைய அங்கீகரிக்கப்பட்ட கொள்ளளவு வரையறை செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின் அந்த அளவுகள் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் தனித்தனியாக யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) கள்ளு உற்பத்திக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் நலனோம்புகைக்காக அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கென செலவிடப்பட்டுள்ள தொகை யாது என்பதையும்;

அவர் மேலும் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

224/2020

கௌரவ மொஹொமட் முசம்மில்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட இயந்திர சாதனங்களின் அளவு யாதென்பதையும்;

(ii) மேற்படி இயந்திர சாதனங்கள் எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iii) மேற்படி இயந்திர சாதனங்களை இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு இயந்திர சாதனங்களை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

255/2020

கௌரவ வேலு குமார்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கண்டி மாவட்டத்தின் தெல்தோட்டை பிரதேச செயலக பிரிவில் அமைந்துள்ள போபிட்டிய தோட்டம் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு சொந்தமான தோட்டம் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 1992 ஆம் ஆண்டு அரசாங்கம் வசமிருந்த தோட்டங்களை மறுசீரமைப்புச் செய்த போது இத்தோட்டத்திற்கு சொந்தமாயிருந்த பிரிவுகளின் (Divisions) எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அப்பிரிவுகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) அத்தோட்டத்தில் முழுமையாக பயிர்செய்கை மேற்கொண்ட நிலப்பகுதியின் அளவு யாதென்பதையும்;

(iv) மேற்குறிப்பிட்ட தோட்டத்தில் 2015 ஆம் ஆண்டளவில் கைவிடப்பட்ட பிரிவுகள் உள்ளனவாவென்பதையும்;

(v) அவ்வாறாயின், அப்பிரிவுகளின் மொத்த நிலப் பகுதியின் அளவு யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பார?

(இ) (i) 1992 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இத்தோட்டத்திற்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டடங்கள் வெளித்தரப்பிற்கு/ தனியார்துறைக்கு வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) அவ் விபரங்கள் யாவை என்பதையும்;

(iii) இறுதியாக மேற்கொண்ட காணி கணிக்கீட்டுக்கு அமைவாக பயிர்ச்செய்கை மேற்கொண்ட காணிகள் மற்றும் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாத காணிகளின் அளவு யாதென்பதையும்;

வெவ்வேறாக அவர் மேலும் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

500/2020

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— நீர்வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள கிராமங்களுள் குடிநீர்த் தட்டுப்பாடு நிலவும் கிராமங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அக் கிராமங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) அக் கிராமங்களில் நிலவும் குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

559/2020

கௌரவ மயந்த திசாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த அரசாங்கத்தினால் தொடங்கப்பட்ட "அண்மித்த பாடசாலை சிறந்த பாடசாலை" கருத்திட்டத்தின் கீழ் நிர்மாணப் பணிகள் தொடங்கப்பட்ட பாடசாலைக் கட்டடங்களின் எண்ணிக்கை மாவட்ட வாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைந்துள்ள ஒவ்வொரு பாடசாலைக்கும் வழங்கப்பட்டுள்ள கட்டடங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) அவற்றின் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ள கட்டடங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iv) பணிகள் நிறைவு செய்யப்படாத கட்டடங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டத்துக்காக செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இன்றளவில் அக் கருத்திட்டம் நிறுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கு காரணமான விடயங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

578/2020

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வட மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் சுவீகரித்துக்கொள்ளப்பட்டுள்ள காணிகளின் பரப்பளவு தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(ii) அந்த அளவானது வட மாகாணத்திற்கான மொத்தக் காணிப் பரப்பளவின் எத்தனை சதவீதம் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இவ்வகையில் காணிகள் சவீகரித்துக்கொள்ளப்படும்போது தனியார் காணிகள், விவசாய வாவிகள், விவசாயக் காணிகள் மற்றும் கால் நடைகளுக்கான புற்தரைகளும் சுவீகரித்துக்கொள்ளப்பட்டுள்ளதோடு அது மக்களின் வாழ்வாதாரத்தின் மீது மட்டுமன்றி சகவாழ்வின் மீதும் பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(இ) மேற்படி காணிகள் சுவீகரித்துக்கொள்ளப்படும்போது மாவட்டச் செயலாளர், பிரதேச செயலாளர் மற்றும் மாகாண காணி ஆணையாளர் என்போரின் ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

776/2020

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— கல்வி அமைச்சரை கேட்பதற்கு,— (1)

(அ) (i) குளியாப்பிட்டி தேர்தல் தொகுதியில் அமைந்துள்ள தேசிய கால்நடை வளங்கள் சபைக்குச் சொந்தமான நாரங்கல்ல தோட்டத்திற்குரிய காணியொன்றில் கடந்த அரசாங்கத்தின் காலத்தில் தொழில்நுட்பப் பீடமொன்றை அமைப்பதற்காக அடிக்கல் நாட்டப்பட்டது என்பதையும்;

(ii) இந்தத் தொழில்நுட்பப் பீடத்தை ஆரம்பிப்பதற்காக அடிக்கல் நாட்டப்பட்ட காணி தற்போது காடுபடர்ந்து காணப்படுகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி தொழில்நுட்பப் பீடம் ஆரம்பிக்கப்படுவதன் முக்கிய நோக்கம் யாது என்பதையும்;

(ii) தொழில்நுட்பப் பீடம் இதுவரை ஆரம்பிக்கப்படாமைக்கான காரணம் யாது என்பதையும்;

(iii) மேற்படி அடிக்கல் நாட்டும் வைபவத்திற்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) இதற்கென ஒதுக்கப்பட்ட காணி இன்றளவில் கல்வி அமைச்சுக்காக சுவீகரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2020 டிசம்பர் 05, சனிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

60/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை கிரிக்கெட் நிறுவனமானது கிரிக்கெட் பல்கலைக்கழகமொன்றை அமைப்பதற்கான திட்டமொன்றைத் தயாரித்துள்ளதா என்பதையும்;

(ii) கண்டிப் பிரதேசத்தில் அதற்கான காணியைக் கொள்வனவு செய்வதற்காக பணம் செலவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அதற்கென செலவிடப்பட்டுள்ள மொத்தத் தொகை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) பாராளுமன்றத்தின் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், மேற்படி காணிக் கொள்வனவின்போது பாரிய நிதி மோசடி நடந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா?

(இ) அவ்வாறாயின், அது தொடர்பில் அமைச்சினால் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

166/2020

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கோட்டே பிரதேச செயலாளர் பிரிவில் காணி உறுதியற்ற வீடுகள் எத்தனை உள்ளன;

(ii) மேற்படி வீடுகளுக்கு உறுதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கான வேலைத்திட்டம் உள்ளதா;

(iii) ஆமெனில், அது தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற வேலைத்திட்டம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

422/2020

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— பெருந்தெருக்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உத்தேச மத்திய அதிவேக நெடுஞ்சாலைக் கருத்திட்டத்தின் நான்காவது கட்டத்தின் (குருணாகல்-தம்புள்ளை) தற்போதைய நிலைமையை இச்சபையில் அறிவிப்பாரா;

(ii) மேற்படி கருத்திட்டம் காரணமாக ஆதனங்களை இழந்தவர்களுக்காக செலுத்தப்படுகின்ற இழப்பீட்டுத் தொகை இன்றளவில் தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின் அதனை இச்சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்தால் விகாரைகளுக்குச் சொந்தமான ஆதனங்களை அனுபவிப்பவர்கள் இழக்கின்ற ஆதனங்களுக்கென இழப்பீடு வழங்கப்படும் விதம் யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி கருத்திட்டத்திற்காக இழப்பீடு செலுத்தும் போது —

(i) காணிக்காக கொடுப்பனவுகள் செலுத்தப்படும் சதவீதம் யாது;

(ii) அபிவிருத்திப் பெறுமதிக்காக கொடுப்பனவுகள் செலுத்தப்படும் விதம் யாது;

என்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

430/2020

கௌரவ சாந்த பண்டார,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையின் வடமேல் மாகாணத்தில் தெதுருஓயா கருத்திட்டம் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்திற்காக செலவிடப்பட்டுள்ள /செலவிடப்படும் தொகை எவ்வளவு;

(ii) கருத்திட்டத்திற்காக நிதி பெற்றுக்கொள்ளப்பட்ட மூலங்கள் யாவை;

(iii) கருத்திட்டத்திற்காக காணிகளை நன்கொடையளித்த குடும்பங்களின் எண்ணக்கை எத்தனை;

(iv) மேற்படி குடும்பங்களுக்கு போதிய நட்டஈடு செலுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதா;

(v) மேற்படி குடும்பங்களுக்கு நட்டஈடு செலுத்துவதற்காக செலவிடப்பட்டுள்ள தொகை எவவளவு;

(vi) இதுவரை நட்டஈடு செலுத்தப்படாதுள்ள குடும்பங்களுக்கு நட்டஈடு செலுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுமா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

491/2020

கௌரவ நிரோஷன் பெரேரா,— வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஆனவிழுந்தாவ பறவைகள் சரணாலயத்தில் (இரம்சா ஈரநிலம்) இன்றளவில் அனுமதியற்ற இறால் வளர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இப்பிரதேசத்தில், இறால் வளர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட இறால் வளர்ப்புக் குட்டை கைவிடப்படுவதோடு மீள புனரமைத்துப் பயன்படுத்தும் நடவடிக்கைகளுக்கும் மேற்கொள்ளப்படுகின்றதென்பதை அவர் ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட சட்டவிரோத இறால் வளர்ப்பு நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

518/2020

கௌரவ சாணக்கியா ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1973 ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்டு இற்றைக்கு மூன்று ஆண்டுகளுக்கு மேலாக செயலற்று காணப்படும் கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் திணைக்களத்தின் மட்டகளப்பு மாவட்ட அலுவலகத்தை அண்மித்து நிறுவப்பட்டுள்ள ஐஸ் தொழில்சாலையை மீண்டும் புனரமைத்து இயக்க வேண்டுமெனவும்;

(ii) இதன் மூலம் மீனவப் படகுகள் மற்றும் கரைவலையை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டுவரும் மற்றும் ஆழ்கடல் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுவரும் உள்நாட்டு மீனவர்களுக்கு நன்மை ஏற்படும் என்பதோடு இவர்களது வாழ்வாதாரத்தையும் மேம்படுத்துவதற்கு வாய்ப்புக்கள் ஏற்படுமென்பதையும்;

(iii) இங்கு காணப்படும் களஞ்சிய வசதிகள் காரணமாக போதனா வைத்தியசாலைக்கும் வேறு நிறுவனங்களுக்கும் தேவையான கடலுணவை களஞ்சியப்படுத்தி விநியோகிக்க முடியுமெனவும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி ஐஸ் தொழில்சாலையை புனரமைத்து மீண்டும் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

521/2020

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவியின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டனவா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குறிப்பிட்ட நேர்முகப் பரீட்சைக்காக உத்தியோகத்தர்கள் அழைக்கப்பட்டனரா;

(ii) மேற்படி நேர்முகப் பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படும் முறை யாது என்பதையும்;

(iii) நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்பட்டிருந்த காலப் பகுதியில் புள்ளி வழங்கும் முறையானது திருத்தப்பட்டதா;

(iv) அவ்வாறு உரிய முறையில் திருத்தப்படுவது பொருத்தமானதா;

(v) மேற்படி முறை திருத்தப்பட்டமை தொடர்பாக விண்ணப்பதாரிகள் விழிப்பூட்டப்பட்டனரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி நேர்முகப் பரீட்சை நடத்தப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட வேளையில் விண்ணப்பித்திருந்த உத்தியோகத்தர்களின் மூப்புரிமைப் பதிவேடு முற்தேதியிடப்பட்டதா?

(ii) ஆமெனில், அந்த உத்தியோகத்தர்களின் பெயர்கள் யாவை;

(iii) அவ்வாறு முற்தேதியிடப்பட்டதன் அடிப்படை யாது;

(iv) அதன் பின்னர், எதுவித அறிவித்தலோ விளக்கமளித்தலோ இன்றி நேர்முகப் பரீட்சை ஒத்திவைக்கப்பட்டதா;

(v) நேர்முகப பரீட்சையின் தற்போதைய நிலைமை யாது;

(vi) நேர்முகப் பரீட்சை எதிர்காலத்தில் நடத்தப்படுமா;

(vii) ஆமெனின், அத்திகதி யாது;

என்பதை அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவியில் பதிற் கடமை புரிவதற்காக பிரதான பொலிஸ் பரிசோதகர் பதவியைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனரா?

(ii) ஆமனில் அக்கடமைகள் யாவை?

என்பதை மேலதிகமாகவும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

782/2020

கௌரவ கே. காதர் மஸ்தான்,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் முசலி பிரதேசத்தில் அமைந்துள்ள சிறிய குளங்கள் புனரமைக்கப்பட்டன என்பதை அவர் அறிவாரா;

(ii) ஆமெனில், அக்காலப்பகுதியில் புனரமைக்கப்பட்ட குளங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) அக்குளங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iv) அக்குளங்களைப் புனரமைப்பதற்காக முதலீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் புனரமைக்கப்பட்ட, முசலி பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள குளங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அக்குளங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) அக்குளங்களைப் புனரமைப்பதற்காக முதலீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் இக்குளங்களின் புனரமைப்புப் பணிகளை மேற்கொண்ட நிறுவனம் யாதென்பதையும்;

(v) அந்நிறுவனம் எவ்வடிப்படையில் தெரிவு செய்யப்பட்டதென்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2020 டிசம்பர் 07, திங்கட்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

130/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள மாநகர சபைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி மாநகர சபைகளில் கழிவுகளை அகற்றும் விடயத்தை தனியார் நிறுவனங்களுக்கு கையளித்துள்ள மாநகர சபைகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி மாநகரசபைகளின் கழிவுகளை அகற்றும் பணிகளை பொறுப்பேற்றுக் கொண்டுள்ள தனியார் கம்பனிகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை மேற்படி கம்பனிகளுக்கு செலுத்தப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) உள்ளூராட்சி நிறுவனங்களின் ஊழியர்களை ஈடுபடுத்தி அவற்றின் ஆளுகைப் பிரதேசத்திலுள்ள கழிவுகளை அகற்றுவதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கை யாதென்பதை அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

306/2020

கௌரவ வேலு குமார்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கண்டி மாவட்டத்தின் கட்டுகஸ்தோட்டை கல்வி வலயத்தில் 3 ஆவது வகைக்குரிய (Type 3) பாடசாலையான கசாவத்த வித்தியாலயம் அமைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி பாடசாலையில், இன்றளவில் —

(i) கல்வி கற்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) பயன்பாட்டிலுள்ள வகுப்பறைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) பயன்படுத்தப்படுகின்ற மொத்த நிலப்பரப்பு எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி பாடசாலையில் பயன்படுத்தப்பட்ட கட்டிடமொன்று, தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் பாவனைக்கு உகந்ததல்ல எனப் பரிந்துரைக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட கட்டிடத்தை பயன்படுத்துவதிலிருந்து நீக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஈ) ஆமெனில், அதற்குப் பதிலாக புதிய கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

432/2020

கௌரவ சாந்த பண்டார,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) குறைந்த வருமானம் ஈட்டும் குடும்பங்களிலிருந்து அரசாங்கப் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகும் மாணவர்களுக்கு மஹபொல புலமைப் பரிசில் வழங்கப்படுவதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 2020 ஆம் ஆண்டில் மஹபொல புலமைப் பரிசில் வழங்கப்பட்ட ஒட்டுமொத்த மாணவர்களின் எண்ணிக்கை;

(ii) மேற்படி புலமைப் பரிசிலைப் பெறுவதற்கு இருக்க வேண்டிய ஆகக் குறைந்த தகைமை யாது;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மஹபொல புலமைப்பரிசில் பெறுவதற்கான தகைமை இருந்தும் அந்தப் புலமைப் பரிசில் கிடைக்காத மாணவர்கள் உள்ளனர் என்பதை அவர் அறிவாரா;

(ii) அவ்வாறான மாணவர்களுக்கு நியாயம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

454/2020

கௌரவ இஷாக் ரஹுமான்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அனுராதபுர மாவட்டத்தின் இப்பலோகம பிரதேச செயலகப் பிரிவின் 493 ஆம் இலக்க விஜிதபுர கிராம உத்தியோகத்தர் பிரிவில் தற்போதைய பிரதம அமைச்சர் கடற்றொழில் அமைச்சராக இருந்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட தியவர மீன்பிடி கிராமத்தின் தற்போதைய நிலைமையினை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி கிராமத்தின் காணிகளுக்கு உறுதிகளை வழங்குவதற்கு அடிப்படை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நடவடிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி காணிகளுக்கு உறுதிகள் வழங்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

516/2020

கௌரவ ஆர்.எம். ரஞ்சித் மத்துமபண்டார,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிபில, மொனராகலை வீதி, 1 ஆம் மைல்கல், மடமேவத்த எனும் முகவரியில் வதியும் திருமதி. பீ.வீ. வசந்த ராணி, ஊவா மாகாண கமத்தொழில் அமைச்சிற்கு சொந்தமான பிபில அரச பண்ணையைச் சார்ந்த, மாகாண கமத்தொழில் நிறுவனத்தில் 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் வரையிலான காலப்பகுதியில் தொழிலாளர் பதவியில் பணியாற்றியுள்ளாரென்பதையும்;

(ii) மேற்படி சேவைக் காலத்திற்குள் இவர் இடையறாமல் 180 நாட்கள் பணியாற்றியுள்ளாரென்பதையும்;

(iii) 29/2019 இலக்கமுடைய பொது நிருவாக சுற்றுநிருபத்திற்கு அமைவாக இவர் நிரந்தர சேவைக்கு உரித்தினை பெற்றுள்ளாரென்பதையும்;

(iv) ஆயினும், 2020 ஆம் ஆண்டு சனவரி முதல் இவரின் சேவை இடைநிறுத்தப் பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) தனது தொழிலை இழக்க நேரிட்டதால் மிகவும் நிர்க்கதி நிலைக்குள்ளாகியுள்ள திருமதி வசந்த ராணியை மீண்டும் தொழிலில் அமர்த்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

716/2020

கௌரவ யதாமினீ குணவர்தன,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையில் உயர் நீதிமன்றத்திலும் மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும் வழக்குத் தீர்ப்புகள் ஆங்கில மொழியில் மாத்திரம் வழங்கப்படுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், இலங்கை அரசியலமைப்பின் 24 (1) உறுப்புரையின் பிரகாரம் உயர் நீதிமன்ற மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்குத் தீர்ப்புகளை சிங்கள மொழியிலும் வழங்குவதற்கு நடவடிக்கையெடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

726/2020

கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தளை மாவட்டத்தின் லக்கல, பள்ளேகம பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள லக்கல பிரதேச வைத்தியசாலையை புதிதாக நிர்மாணிப்பதற்கு அரசாங்கம் செலவிடப்பட்டுள்ள மொத்தத் தொகை யாது என்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுக்கொள்ளக் கூடிய நோயாளிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) வைத்தியசாலைக்கு அங்கீகரிக்கப்பட்ட வைத்தியர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) தற்போது மேற்படி வைத்தியசாலையில் சேவையாற்றுகின்ற வைத்தியர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(v) வைத்தியசாலைக்கு அங்கீகரிக்கப்பட்ட தாதியர் பணியாட்டொகுதி யாது என்பதையும்;

(vi) தற்போது மேற்படி வைத்தியசாலையில் சேவையில் ஈடுபட்டுள்ள தாதியர் பணியாட்டொகுதி யாது என்பதையும்;

(vii) தற்போது மேற்படி வைத்தியசாலையில் பேணிவரப்படுகின்ற சாய்சாலைகளின் வகைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

759/2020

கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்,— வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் உத்தியோகபூர்வமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள வட மாகாணத்தில் அமைந்துள்ள காடுகளுக்கு உரித்தான நிலப்பரப்பு யாது என்பதையும்;

(ii) 1982 ஆம் ஆண்டளவில் பிரகடனப்படுத்தப்பட்டிருந்த காடுகளுக்கு உரித்தான நிலப்பரப்பு யாது என்பதையும்;

(iii) மேற்படி நிலப்பரப்புகளுக்கு இடையில் வித்தியாசம் காணப்படுவதாயின், இந்த வித்தியாசத்துக்கான காரணம் யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தெரிவு செய்யப்படும் பிரதேசமொன்றை வன ஒதுக்குப் பிரதேசமாக வர்த்தமானியில் அறிவிக்கும் செயன்முறை யாது என்பதையும்;

(ii) 2009 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் வட மாகாணத்துக்கு ஏற்புடையதாக, புதிதாக வனப் பாதுகாப்புத் தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2020 டிசம்பர் 08, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

22/2020

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020 – 08 - 31 ஆந் திகதியளவில் இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள நிதிக் கம்பனிகளின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றின் பெயர்கள் மற்றும் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் யாவர்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கடந்த நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த நாள் முதல் 2020-08-31 ஆந் திகதி வரையில் நிதி நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து நிதிக் கம்பனிகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை;

(ii) மேற்படி ஒவ்வொரு நிதிக் கம்பனியிலும் வைப்புக்களைப் பேணி வந்துள்ள வைப்பாளர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iii) மேற்படி நிதிக் கம்பனிகளின் வைப்பாளர்களுக்கு நியாயத்தை வழங்குவதற்காக இதுவரையில் எடுக்கப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

108/2020

கௌரவ புத்திக பத்திறண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள சிறுவர்களுக்கு வழங்கப்படும் திரிபோஷ துணை போசணை போதியளவிலும் ஒழுங்குமுறையாகவும் கிடைப்பதில்லை என்பதையும்;

(ii) சிறுவர் மந்தபோசணை கணிசமானளவு காணப்படுவதற்கு இவ்விடயமும் காரணமாக அமைகின்றதென்பதையும்;

(iii) இதன் காரணமாக பிள்ளைகளைக் கொண்டிருக்கும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகின்றார்கள் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) தற்போது, ஆண்டுக்கான திரிபோஷ உற்பத்திக் கொள்ளளவு எத்தனை கிலோகிராம் என்பதையும்;

(ii) ஓராண்டின் நுகர்வுக்காக எத்தனை கிலோகிராம் திரிபோஷ தேவைப்படுகின்றதென கணிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்தளவு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) (i) நாட்டின் தேவைக்கு போதுமானளவு திரிபோஷ உற்பத்திசெய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அது எப்படியென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

434/2020

கௌரவ சாந்த பண்டார,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) டெங்கு நோய்த்தாக்கம் பல்வேறான சந்தர்ப்பங்களில் இலங்கையில் அதிகரிக்கின்றது என்பதனை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) 2019 ஆம் வருடத்தில் டெங்கு நோய் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) டெங்கு நோயை ஒழிப்பதற்காக தேசிய மற்றும் பிரதேச மட்டத்தில் ஏதேனும் வேலைத்திட்டம் மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும்;

(iii) பிரதேச டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்ட தொழிலாளர்கள் உள்ளனர் என்பதனை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) அவ்வாறெனில், அவர்களது சேவையை தொடர்ச்சியாகப் பெறுவதற்கு வேலைத்திட்டம் ஏதேனும் உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

455/2020

கௌரவ இஷாக் ரஹுமான்,— வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுர மாவட்டத்தின் மெதவச்சிய பிரதேச செயலகப் பிரிவின் முறையே 225, 226 மற்றும் 227 ஆம் இலக்க கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வசிக்கின்ற மக்கள் காட்டு யானைகள் அச்சுறுத்தல் காரணமாக தமது வாழ்விடங்களை கைவிட்டு வேறு பிரதேசங்களுக்கு இடம்பெயர்ந்து செல்லும் நிலைமையொன்று ஏற்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி பிரிவுகளில் வசிக்கின்ற மக்கள் யானைகள் தடுப்பு வேலியொன்றை நிர்மாணித்துத் தருமாறு அதிகாரிகளை அறிவுறுத்தியுள்ள போதிலும் இதுவரை அதற்கு தீர்வு கிடைக்கவில்லை யென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், இவ்விடயம் தொடர்பாக அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

546/2020

கௌரவ சந்திம வீரக்கொடி,— நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பத்தேகம, அம்பலாந்தோட்டை, பெந்தர-எல்பிட்டிய, கரந்தெனிய மற்றும் பலபிட்டிய ஆகிய தேர்தல் தொகுதிகளில் வசிக்கின்ற மக்கள் கடும் குடிநீர் பிரச்சினையை எதிர்கொண்டுள்ளார் என்பதையு அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பிரச்சினைக்கு தீர்வாக பத்தேகம நீர் விநியோகத் திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்கு எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் நிதி ஒதுக்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட பிரதேசங்களில் நிலவுகின்ற குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு வழங்கப்படுகின்ற திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

591/2020

கௌரவ எஸ். எம். எம். முஸ்ஸாரப்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையில் காணப்படும் ஒரேயொரு உப கல்வி வலயம், பொத்துவில் உப கல்வி வலயம் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வலய அலுவலகத்தில் பணி புரிகின்ற இலங்கை கல்வி நிருவாக சேவை உத்தியோகத்தர்கள் இருவருக்கும் நிருவாகப் பொறுப்புக்கள் வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை;

(ii) முறையாக அதிகாரமளிக்கப்பட்டுள்ள உப கல்வி வலயமாகக் காணப்படுகின்ற போதிலும், இவ்விதம் உத்தியோகத்தர்கள் புறக்கணிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியுமா;

(iii) இந்த நிலைமை காரணமாக, பொத்துவில் பிரிவினைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு சிறியதொரு கடமையின் நிமித்தமும் அக்கரைப்பற்று வலய அலுவலகத்திற்குச் செல்ல வேண்டியுள்ளமையினால், இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) பொத்துவிலில் உள்ள சகல பாடசாலைகளையும் ஒருங்கிணைத்து பொத்துவில் பிரதேசத்திற்குத் தனியானதொரு கல்வி வலயத்தை தாபிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா;

(ii) ஆமெனில், அது தாபிக்கப்படும் திகதி யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) பல்வித இனங்களையும் ஒன்றிணைத்தல் அரசாங்கத்தின் நோக்கமாகவுள்ள போதிலும், முஸ்லிம் பாடசாலைகள் அக்கரைப்பற்று வலயத்துடனும், தமிழ் பாடசாலைகள் திருக்கோவில் வலயத்துடனும், சிங்களப் பாடசாலைகள் அம்பாறை வலயத்துடனும் வெவ்வேறாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளமையினை அவர் அறிவாரா?

(உ) இன்றேல், ஏன்?

711/2020

கௌரவ பீ.வை.ஜீ. ரத்னசேக்கர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது இயங்குகின்ற முன்பள்ளிகளின் எண்ணிக்கை யாது;

(ii) தற்போது மூடப்பட்டுள்ள முன்பள்ளிகளின் எண்ணிக்கை யாது;

(iii) முன்பள்ளிகளின் வசதிகளை அதிகரிப்பதற்கு அரசாங்கம் மேற்கொள்ள உத்தேசித்துள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சம்பளம் அல்லது கொடுப்பனவினை வழங்குவதிலான முறையான செயன்முறையொன்று காணப்படுகின்றதா;

(ii) முன்பள்ளி ஆசிரியர்களை இலங்கை ஆசிரியர் சேவையில் அல்லது அதற்கு நிகரான பிறிதொரு ஒருங்கிணைந்த சேவையில் உள்ளீர்ப்பதற்கான வேலைத்திட்டமொன்று உள்ளதா;

(iii) முன்பள்ளி ஆசிரியர்களின் ஆட்சேர்ப்பு மற்றும் அவர்களது தகைமைகளைத் தீர்மானித்தல் தொடர்பில் குறிப்பிட்டதொரு ஒழுங்குமுறைப்படுத்தும் செயன்முறை காணப்படுகின்றதா;

(iv) முன்பள்ளிகளில் கல்வி பயிலும் பிள்ளைகளிடமிருந்து அறவிடப்படும் கட்டணங்களை ஒழுங்குமுறைப்படுத்தும் செயன்முறையொன்று உள்ளதா;

என்பதையும் அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) முன்பள்ளிகளின் கல்வியை முறைப்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ள புதிய பிரேரணைகள் யாவை என்பதை அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

727/2020

கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அப்போதைக்கு அதிகாரத்திலிருந்த சனாதிபதியினால் 2013 சனவரி மாதம் 15 ஆம் திகதி பிரதம நீதியரசர் பதவிக்கு, அரசியலமைப்புக்கு அமைவாக நியமிக்கப்பட்ட திரு. மொஹான் பீரிஸின் நியமனமானது பின்னர் இரத்துச் செய்யப்பட்டு வலுவிழக்கச் செய்யப்பட்டது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) திரு. மொஹான் பீரிஸின் பிரதம நீதியரசர் பதவிக்கான நியமனம் யாரால் இரத்துச் செய்யப்பட்டு வலுவிழக்கச் செய்யப்பட்டது என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# 2020 டிசம்பர் 09, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

61/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தில் பதவிகளை வகித்த / வகிக்கின்ற நபர்களின் பெயர்கள் மற்றும் அவர்களின் பதவிகள் யாவை என்பதையும்;

(ii) அக்காலப் பகுதியில் ஒவ்வொரு நபரும் மேற்கொண்ட உத்தியோகபூர்வ வெளிநாட்டுப் பயணங்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு அலுவலரினதும் உத்தியோகபூர்வ வெளிநாட்டுப் பயணங்களுக்காக இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தால் ஏற்கப்பட்ட செலவுகள் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(iv) அத்தகைய உத்தியோகபூர்வ வெளிநாட்டுப் பயணங்களால் இலங்கையின் கிரிக்கெட் விளையாட்டுத் துறைக்குக் கிடைத்த பயன்கள் யாவை என்பதையும்;

(v) அவ்வாறான ஏதேனும் பயன் பெற்றிருப்பின், அது தொடர்பான தகவல்களைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

478/2020

கௌரவ திலிப் வெதஆரச்சி,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள மீன்பிடித் துறைமுகங்களின் எண்ணிக்கை;

(ii) இவற்றில் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள மீன்பிடித் துறைமுகங்களின் எண்ணிக்கை;

(iii) புதிதாக நிர்மாணிப்பதற்கு உத்தேசித்துள்ள மீன்பிடித் துறைமுகங்களின் எண்ணிக்கை;

யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ள மாவெல்ல நங்கூரத் தளம், ரெக்கவ நங்கூரத்தளம், அம்பாந்தோட்டை மீன்பிடித் துறைமுகம் மற்றும் கந்தர மீன்பிடித் துறைமுகங்களின் தற்போதைய நிலைமை யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

520/2020

கௌரவ சாணக்கியா ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) புன்னைக்குடா, கோட்டைக்கல்லாறு ஆகிய பிரதேசங்களுக்கு முகத்துவார வாயில்களை (Bay Mouth Gates) நிர்மாணித்து படகுகளை நிறுத்தி வைப்பதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலமாக பல உள்ளூர் கடற்றொழிலாளர்கள் பயன்களைப் பெற்றுக்கொள்ள முடியுமென்பதை அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், அப்பிரதேசங்களில் முகத்துவார வாயில்களை நிர்மாணிப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

529/2020

கௌரவ ரோஹன பண்டார,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) அக் கிராம அலுவலர் பிரிவுகளுள் தற்போது நிரந்தர கிராம அலுவலர்கள் காணப்படும் பிரிவுகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iv) நிரந்தர கிராம அலுவலர்கள் இல்லாத பிரிவுகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) நிரந்தர கிராம அலுவலர்கள் இல்லாத பிரிவுகளில் நிலவும் கிராம அலுவலர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

542/2020

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கலாநிதி சீ. டப்ளியூ. டப்ளியூ. கன்னங்கரவினால் ஆரம்பிக்கப்பட்ட மத்திய கல்லூரிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி மத்திய கல்லூரிகளுக்கு தரம் 6 மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் வழிமுறை யாதென்தையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) கலாநிதி சீ.டப்ளியூ.டப்ளியூ. கன்னங்கரவினால் ஆரம்பிக்கப்பட்ட மத்திய கல்லூரியொன்று குளியாப்பிட்டி தேர்தல் தொகுதியில் அமைந்துள்ளது என்பதை அவர் அறிவாரா?

(இ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையான காலத்தில், மேற்படி (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்லூரியில் 6 ஆம் தரத்திற்கென சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) சேர்த்துக்கொள்ளப்பட்ட ஒவ்வொரு மாணவரும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் பெற்றுக்கொண்டுள்ள புள்ளிகள் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி கல்லூரிக்கு புலமைப் பரிசில் பரீட்சையின் வெட்டுப் புள்ளிகளை விட குறைவான புள்ளிகளைப் பெற்ற எத்தனை மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

557/2020

கௌரவ சந்திம வீரக்கொடி,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஈட்டி எறிந்து மீன்பிடிக்கும் விளையாட்டில் ஈடுபடுவதற்காக ஏராளமான வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் இலங்கைக்கு வருகை தருகின்றார்கள் என்பதையும்;

(ii) ஒலிம்பிக் விளையாட்டுகளில் ஒன்றாக உள்ள மேற்படி விளையாட்டினை இலங்கையில் மேற்கொள்ள முடியாதவாறு சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இலங்கைக்கு வருகின்ற வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளுக்கு மீள மேற்படி விளையாட்டில் ஈடுபடுவதற்கேற்றவாறு மேற்குறிப்பிட்ட சட்டங்களில் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

653/2020

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அம்பாந்தோட்டை எல்லல வன ஒதுக்கம், ஹொரொவப்பத்தான ரத்மலே வன ஒதுக்கம், மற்றும் மஹதிவுல்வெவ அன்டியாஹின்ன வன ஒதுக்கம் உள்ளிட்ட சில வன ஒதுக்கங்களில் காடழிப்புகள் இடம்பெற்றுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி காடழிப்புகளை மேற்கொண்ட ஆட்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி வன ஒதுக்கங்களில் அழிக்கப்பட்டுள்ள வன நிலப்பரப்பின் அளவு ஹெக்டெயர்களில் எவ்வளவென்பதையும்;

(iii) இன்றளவில் காடழிப்பு ஓர் அலையாக நாடு முழுவதும் விரிவடைவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

728/2020

கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்,— நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தளை மாவட்டத்தின் வில்கமுவ பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள ஹீங்கங்கை குடிநீர் திட்டத்தின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) மேற்படி திட்டத்தில் உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் யார் என்பதையும்;

(iii) மேற்படி திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் அளவு யாது என்பதையும்;

(iv) உடன்படிக்கையின் பிரகாரம் இத்திட்டத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி யாது என்பதையும்;

(v) உரிய திகதியில் இத்திட்டத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2020 டிசம்பர் 10, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

262/2020

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சரும் புத்தசாசன, சமய, மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பௌத்த தர்மம் நடைமுறை சாத்தியமுடையதொரு தர்மம் என்பதையும்;

(ii) அது பரீட்சைகளை இலக்குவைத்தொரு விடயமாக ஏற்கனவே பாடசாலை களிலும் அறநெறி பாடசாலைகளிலும் கற்பிக்கப்படுகின்றதென்பதையும்;

(iii) ஆயினும், மேற்படி முறைமைகள் ஊடாக பௌத்த கோட்பாடுகளின் வாயிலாக வாழ்கையின் பால் உள்ளீர்த்துக்கொள்ளக்கூடிய ஒழுக்கம், பணிவு போன்ற உயரிய மானிடப் பண்புகள் போதியளவிற்கு சமூக நீரோட்டத்திற்குள்ளாவதில்லை என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) பௌத்த கோட்பாட்டின் நடைமுறை பயன்பாட்டினை போதிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கை எவ்வகையில் மேற்கொள்ளப்படும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

424/2020

கௌரவ ரோஹிணி குமாரி விஜேரத்ன,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் - ஹபரணை புகையிரதப் பாதை நிர்மாணிக்கப்படும்போது குறிபிட்ட பாதையை நிச்சயித்துக்கொள்வதற்காக 3 தடவைகள் அளவிடல் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு 3ஆவது அளவிடலுக்கு அமைவாக பாதையை நிர்மாணிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் பெலிகமுவ - கலேவல – தம்புள்ள பகுதியின் நிர்மாணப் பணிகள் பொருளாதார ரீதியில் அதிக பெறுமதிவாய்ந்த காணிகள் ஊடாக மேற்கொள்ளப்படுவதால் அதிக நட்டயீட்டுத் தொகை செலுத்த வேண்டியேற்படாதா என்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட புகையிரதப் பாதைக்கான நிர்மாணத்தினை நிச்சயிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட மூன்றாவது அளவிடலுக்கு அமைவாக இப்புகையிரதப் பாதையை நிர்மாணிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருப்பினும் அதன் முதலாவது அளவிடலுக்கு அமைவாக இப்பாதையை நிர்மாணிப்பதன் மூலம் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் குறைவடைந்து, செலுத்த வேண்டிய நட்டயீடும் குறைவடையாதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

522/2020

கௌரவ அமரகீர்த்தி அதுகோரள,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பொலன்னறுவை மாவட்டத்தில் உள்ள பாற்பண்ணையாளர்கள், பசுமாடுகள், கறவைப் பசுக்கள், எருமை மாடுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பொலன்னறுவை மாவட்டத்தில் அதிகளவான பாற்பண்ணையாளர்களைக் கொண்டுள்ள பிரதேசம் யாது என்பதையும் ;

(ii) அவர்களுக்கு அரசாங்கம் பசுமாடுகளை வழங்கியிருப்பின் அந்த எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) இறுதியாக அவ்வாறு பசுமாடுகள் வழங்கப்பட்டுள்ள திகதியும் அவற்றில் தற்போது உயிர் வாழ்பவற்றின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) பசுமாடுகளை போஷிப்பதற்காக அரசாங்கம் புற்தரைகளை வழங்கியிருப்பின் அவற்றின் அளவு யாது என்பதையும்;

(v) எதிர்காலத்தில் பற்பண்ணையாளர்களுக்கு வழங்குவதற்காக புற்தரைகள் அடையாளம் காணப்பட்டுள்ளனவா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இலங்கையின் நாளொன்றுக்கான மொத்த பால் உற்பத்தியில் பொலன்னறுவை மாவட்டப் பாலுற்பத்தியாளர்களின் பங்களிப்பின் சதவீதம் எவ்வளவென்பதையும்;

(ii) பொலன்னறுவை மாவட்டத்தில் நாளொன்றுக்கு பசுக்களிலிருந்து எவ்வளவு பால் பெறப்படுகின்றது என்பதையும்;

(iii) தேசிய கால்நடை அபிவிருத்தி சபை / மில்க்கோ தனியார் நிறுவனம் மூலம் நாள்தோறும் கொள்வனவு செய்யப்படும் பாலின் அளவு எவ்வளவென்பதையும்;

(iv) ஒரு லீற்றர் பாலின் விலை எவ்வளவு என்பதையும்

அவர் மேலும் இச்சபைக்கு அறிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

567/2020

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மனிதர்களின் சருமத்தின் நிறத்தை மாற்றமடையச் செய்யும்/ பொழிவூட்டும் (வெள்ளை நிறமாக்கும்) ஔடதங்கள், மாத்திரைகள், தடுப்பூசிகள் மற்றும் களிம்பு (Cream) வகைகளில் பாரியளவில் இலங்கையினுள் விற்பனை செய்யப்படுவதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வாறு விற்பனை செய்யப்படும் ஔடதங்களில் இறக்குமதி செய்யப்படும் ஔடதங்கள் தொடர்பில் ஒழுங்குபடுத்தல் மேற்கொள்ளும் நிறுவனம்;

(ii) மேற்படி ஒழுங்குபடுத்தலுக்கான சட்டம்

யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி ஔடதங்களை விதப்புரை செய்யும் ஏராளமானவர்களுக்கு மருத்துவ விஞ்ஞான அறிவு இல்லையென்பதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(ii) ஔடதங்களின் பாவனையால் பல்வேறு குறுகியகால ஒவ்வாமைகள் ஏற்பட்டுள்ளதாக பதிவாகியுள்ளதா என்பதையும்;

(iii) ஔடத பாவனையின் விளைவாக நீண்டகால மோசமான நோய் நிலைமைகள் ஏற்படக் கூடுமென வெளியாகும் மருத்துவக் கருத்துக்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அவ்வாறு கவனம் செலுத்தப்பட்ட வகையில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) மேற்படி ஔடதங்களின் பாவனையினால் விளைவுகள் ஏற்படுமெனில், அதைத் தவிர்க்க வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், இது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

579/2020

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வட மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினால் சுவீகரித்துக்கொள்ளப்பட்டுள்ள காணிகளின் பரப்பளவு தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(ii) அந்த அளவானது வட மாகாணத்திற்கான மொத்தக் காணிப் பரப்பளவின் எத்தனை சதவீதம் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இவ்வகையில் காணிகள் சுவீகரித்துக்கொள்ளப்படும்போது தனியார் காணிகள், விவசாய வாவிகள், விவசாயக் காணிகள் மற்றும் கால் நடைகளுக்கான புற்தரைகளும் சுவீகரித்துக்கொள்ளப்பட்டுள்ளதோடு அது மக்களின் வாழ்வாதாரத்தின் மீது மட்டுமன்றி சகவாழ்வின் மீதும் பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(இ) மேற்படி காணிகள் சுவீகரித்துக்கொள்ளப்படும்போது மாவட்டச் செயலாளர், பிரதேச செயலாளர் மற்றும் மாகாண காணி ஆணையாளர் என்போரின் ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

602/2020

கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலப்பகுதியில் அரசாங்க நிறுவனங்களில் இடம்பெற்றுள்ள ஊழல்கள் மற்றும் முறைகேடுகள் குறித்து ஆராய்ந்து பார்ப்பதற்காக நியமிக்கப்பட்ட விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் சுகாதார அமைச்சு சார்ந்ததாக இடம்பெற்றுள்ள பாராதூரமான ஊழல்கள் மற்றும் ஏராளமான முறைகேடுகள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப் பட்டதாக ஊடகங்களில் வெளியானது என்பதையும்;

(ii) மேற்படி விசாரணைகளில் புற்றுநோய் எதிர்ப்பு ஔடதங்களை கொள்வனவு செய்யும் கேள்விப்பத்திரம், புலுக்லொக்சிலின் (Flucloxacillin) எனும் நுண்ணுயிர்க் கொல்லி ஔடதங்களைக் கொள்வனவு செய்யும் கேள்விப் பத்திரம் மற்றும் நெவில் பர்னாந்து வைத்தியசாலையை அரசாங்கத்துக்கு பொறுப்பேற்றது தொடர்பிலான அரச நிதி துஷ்பிரயோகம் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி விசாரணைகளில் வெளியான தகவல்கள் மற்றும் மேற்குறிப்பிட்ட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் விதப்புரைகள் யாதென்பது தொடர்பில் ஆராய்ந்து பார்க்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், குறிப்பிட்ட சனாதிபதி ஆணைக்குழு அறிக்கைக்கு ஏற்ப வழங்கப்பட்டுள்ள விதப்புரைகள் யாவை ;

(iii) அதன்போது எத்தகைய நபர்களுக்கு எதிராக சட்டத்தை செயற்படுத்துவதற்கு விதப்புரை செய்யப்பட்டுள்ளது;

(iii) மேற்படி விதப்புரைகள் தொடர்பில் அமைச்சினால் மேற்கொள்ளப்படவுள்ள எதிர்கால நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

760/2020

கௌரவ வடிவேல் சுரேஷ்,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தற்போது பதுளையிலிருந்து கண்டி வரை காணப்படுகின்ற வீதிக்கான மாற்று வழியாக பதுளையிலிருந்து கண்டி வரை 20 – 30 கி.மி. குறைவான தூரத்தைக் கொண்ட புதிய வீதியொன்றை நிர்மாணித்தல் எனும் தலைப்பில் முன்னாள் நெடுஞ்சாலைகள் அமைச்சரினால் 2004.10.29 ஆம் திகதியும் 2004/10 ஆம் இலக்கமும் கொண்ட அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியை இரண்டு கட்டங்களின் கீழ் நிர்மாணிப்பதற்கு குறித்த அமைச்சரவை விஞ்ஞாபனம் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இதுவரை மேற்படி வீதியின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள தூரத்தின் அளவு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) தற்போது மேற்படி வீதியின் வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளன என்பதை அவர் அறிவாரா?

(ஈ) (i) அப்போதைய அபிவிருத்திப் புரட்சியின் கீழ் பிரதான அபிவிருத்திக் கருத்திட்டமொன்றாக இனங்காணப்பட்டிருந்த இந்த வீதியின் வேலைகள் இதுவரை நிறைவு செய்யப்படாதுள்ளமை தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது என்பதையும்;

(ii) விசேட கருத்திட்டமொன்றின் கீழேனும் வீதியின் வேலைகளை நிறைவு செய்து பொது மக்களுக்கு வீதி வசதிகளைச் செய்துகொடுக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

880/2020

கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்,— பிரதம அமைச்சரும் நிதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "கம்பெரலிய" என்ற பெயரில் வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் அமைச்சரவை தீர்மானமொன்றை மேற்கொண்டிருந்ததா என்பதையும்;

(ii) மேற்படி வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதன் நோக்கங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட காலப்பகுதி யாதென்பதையும்;

(iv) மேற்படி வேலைத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டதொகை எவ்வளவென்பதையும்;

(v) அத்திட்டத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(vi) மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்திற்காகவும் செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(vii) "கம்பெரலிய" திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட காலப்பகுதியில் அத்திட்டத்திற்குரியதாக சம்பந்தப்பட்ட விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கும் அவரது பணியாட்டொகுதிக்கும் மேற்கொள்ளப்பட்ட செலவினம் எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) "கம்பெரலிய" திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட ஒவ்வொரு கருத்திட்டத்தின் மூலமும் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேறியுள்ளன என்பதை தொடர்புடைய பிரதேச செயலாளர்களால் உறுதிப்படுத்த முடியுமா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?